<u>வாக்குமூலம்</u>
<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>
<u>வழக்கு எண் : SC.No. 443/2016</u>
<u>வழக்கு சாட்சி PW-8</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | Dr.சண்முகையா | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | வேலுச்சாமி | தொழில் | : | மருத்துவர் (பணி நிறைவு) |
| கிராமம் | : | கடையநல்லூர் | வயது | : | 66 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of February 5th, 2026.

**(2, 4, 5, 6, 7, 8 எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. 1, 3 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>முதல் விசாரணை :</u>

நான் கடையநல்லூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து தற்போது பணிஓய்வு பெற்று விட்டேன். கடந்த 15.02.2013 அன்று இரவு 10.15 மணியளவில் நான் கடையநல்லூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்தபோது, 68 வயது மதிக்கத்தக்க மருதையா என்பவர் சிகிச்சைக்காக என்னிடம் வந்தார். அவரை விசாரித்தபோது 15.02.2013 ம் தேதி, இரவு 09.00 மணிக்கு அடையாளம் தெரிந்த 6 நபர்கள் சுந்தரேசபுரத்திலுள்ள அவரது வீட்டில் வைத்து இரும்பு கம்பி மற்றும் கம்பு வைத்து தாக்கியதாக கூறினார். அவர் சுயநினைவுடன் காணப்பட்டார். அவரை நான் பரிசோதனை செய்து பார்த்தபோது அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது.

(1). தலையின் பின்புறம் 3 x 3 cm அளவில் கன்றிய காயம் காணப்பட்டது.

(2). முன்தலையில் V வடிவில் 3 x 2 cm அளவில் வெட்டுக்காயம் காணப்பட்டது.

(3). நேர்கோடான ஒரு காயம் இடது கண்புருவத்தில் ஒரு இஞ்ச் நீளத்தில் இருந்தது.

(சாட்சி நீதிமன்றத்தில் தாக்கல் செய்த விபத்து பதிவேடு தெளிவாக இல்லாததினால் அவரால் அதனை படித்து பார்த்து காயத்தின் தன்மையை குறித்து சாட்சியம் அளிக்க இயலவில்லை. எனவே, கடையநல்லூர் அரசு மருத்துவமனையில் பராமரித்து வரும் அசல் விபத்து பதிவேட்டை கொண்டு வரவேண்டி மருத்துவ ஆவண காப்பாளருக்கு உத்தரவு வழங்கவும், பின்னர் அந்த அசல் விபத்து பதிவேட்டை பார்த்து சாட்சியம் அளிக்கவும் வேண்டி முதல் விசாரணை பாதியில் நிறுத்தப்பட்டது.)

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.07 14:44:54 +0530